بسم الله الرحمن الرحيم

## **Friday Sermon** / வெள்ளிக்கிழமை குத்துஃபா

# HAPPY NEW YEAR 2018

**05 January 2018**

**(17 Rabi'ul Aakhir 1439 AH)**

# "No Compulsion in Religion"

# "மார்க்கத்தில் எவ்விதக் கட்டாயமுமில்லை"



## HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும் தஅவ்சுதும் அல்ஃபாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் கீழ்வருமாறு தம் உரையினை ஆரம்பித்தார்.

**“மார்க்கத்தில் எவ்விதக் கட்டாயமுமில்லை. (ஏனென்றால்) நிச்சயமாக நேர்வழிக்கும் தவறான வழிக்கும் இடையிலுள்ள வேறுபாடு, மிகத் தெளிவாகி விட்டது. எனவே நன்மையைச் செய்ய விடாது தடுக்கக் கூடியவனை நிராகரித்து, அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறவர் அறுந்துவிடாத மிகவும் உறுதியுள்ள நம்பத் தகுந்த ஒன்றை வலுவாகப் பற்றிக் கொண்டார். அல்லாஹ், நன்கு செவியேற்பவனும் நன்கு அறிபவனுமாவான்”** (2:257)

**“மஹ்தியின் காலகட்டத்தில் இஸ்லாமை ஏற்றுக் கொள்வதற்கு கட்டாயப்படுத்தப்படும்”** என்று பிற இஸ்லாமிக பிரிவை சார்ந்த பெரும்பாலான முல்லாக்களும் தவறாக புரிந்திருக்கின்றனர். எல்லாம் வல்ல இறைவன் கூறுகின்றான் **“விசுவாசத்தின் காரியத்தில் எந்த கட்டாயமுமில்லை”**

ஒரு சமயத்தில் கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்ளும்படி மக்களை கட்டாயப்படுத்தியிருந்தனர். ஆனால் ஆரம்பத்திலிருந்து இஸ்லாம் மார்க்க காரியங்களில் கட்டாயப்படுத்திக் கொள்வதை எதிர்த்தது. இறையடையாளங்கள் பெற்றுக்கொள்ளாதவர்களே மக்களை கட்டாயப்படுத்துவது. அண்ணல் நபிகள் நாயகம் முஹம்மது(ஸல்) அவர்களைப் போல எந்த ஓர் இறைதூதர்களும் அர்ப்புதங்களை செய்யவில்லை. முந்தைய தீர்க்கதரிசிகளின் அர்ப்புதங்கள் அவர்களுடன் இறந்தன. ஆனால் நம் தூதர்(ஸல்) அவர்களின் அர்ப்புதங்கள் இன்றும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இறுதி நாள் வரையிலும் அது வெளிப்பட்டுக் கொள்ளும். எனக்கு ஆதரவாகயிருக்கும் அனைத்து காரியங்களும் அது எதுவாகிலும் அவையாவும் திருதூதர் முஹம்மது(ஸல்) அவர்களின் அற்புதங்களே ஆகும். இதே போன்ற அற்புதங்களை (அடையாளங்களை) காட்டக்கூடிய பிற மதத்தைச் சார்ந்தவர்கள் இருக்கின்றார்களா? நிச்சயமாகவும் இல்லை! அவர்கள் மிக அதிகமளவிற்கு முயர்ச்சித்திருந்தும் எந்த ஓர் அற்புதங்களை காட்டிக் கொள்ளவும் அவர்களுக்கு இயலவில்லை. அவர்களின் தெய்வங்கள் செயற்கையானவை. அவர்கள் உண்மையான இறைவனை பின்பற்றிக் கொள்வதில்லை. இஸ்லாம் என்பது அற்புதங்களின் ஒரு பெருங்கடலாகும். அது ஒருபோதும் எவரையும் கட்டாயப்படுத்தியதில்லை., கட்டாயப்படுத்த வேண்டிய அவசியமுமில்லை.

இஸ்லாமை ஏற்றுக் கொள்வதற்கு கட்டாயப்படுத்தப்படுகின்றது என்பது முற்றிலும் தவறான செய்தியாகும். **திருக்குர் ஆனையும் திருஹதீஸையும் வரலாற்றையும் நாம் கவனமாக ஆய்வு செய்து கொண்டால், இஸ்லாமிற்கு எதிராக எழுப்பப்படும் இத்தகைய குற்றசாட்டுகள் முற்றிலும் அடிப்படையற்றது என்பதை உணர்ந்துக் கொள்ளலாம்.** எல்லா வகையான ஆதாரங்களையும் ஒதுக்கித் தள்ளிவைத்தப் பின் அவர்களின் தவறான எண்ணமும் விடாப்பிடித்தனமும் காரணமாக வேண்டுமென்றே இஸ்லாமின் மீது இட்டு கட்டிக் கூறும் குற்றசாட்டுகளாகுமிது. ஆயினும் இத்தகைய ஆட்சேபனைகள்

ஆதாரமற்றது என்பது உண்மையைத் தேடுபோர்களுக்கு நன்கு தெரியும். **"மார்க்கத்தில் எவ்வித கட்டாயமுமில்லை"** என்று மிக தெளிவாக இஸ்லாம் அதன் வழிமுறைகளை எடுத்துக் கூறியிருந்தும் அந்த நம்பிக்கைக்கு எதிராக இத்தகைய குற்றசாட்டுகளை எவ்வாறு (இவர்களுக்கு) எழுப்ப முடிகின்றது?. 13 வருடகாலம் மக்காவில் மிக கசப்பான, அனைத்துவிதமான துன்புறுத்தல்களுக்கு ஆளாகியும் இறைத்தூதரும் அவரது சீடர்களும் எவ்விதமான எதிர்தாக்குதல்களுக்கும் முற்படவில்லை. பொறுமையை கையாளுவதற்கு மட்டும் அறிவுரையளித்த ஒரு இறைத்தூதர் மீது இத்தகைய குற்றச்சாட்டுகளை எழுப்புவது தீய குணமுடையவர்களன்றி வேறு எவராகயிருக்க முடியும்?

முடிவில் எதிராளிகளின் துன்புறுத்தல்கள் அனைத்து எல்கைகளையும் கடந்து சென்றபோது, எல்லா கோத்திரங்களையும் ஒன்றிணைத்து இஸ்லாமை வாள் கொண்டு அழித்துவிடலாம் என அவர்கள் தீர்மானித்த போது, **"வாள் எடுத்துக் கொண்டவர் வாளால் அழிந்துவிடுவார் என்ற இறை தீர்மானம் நடைமுறையில் வந்தது. முஸ்லீம்களை அழித்துக் கொள்ள முன்வந்தோர்கள் சுயம் அழிந்து கொண்டனர்".**

முஸ்லீம்களை கொலை செய்ய முற்பட்டவர்கள் அதற்கு பதிலாக கொல்லப்பட்டனர். வலுக்கட்டாய முறைகள் மூலம் இஸ்லாமை வளர்க்க அது அனுமதியளித்திருந்ததுயென்றால் பின்னர் எதற்கு முஹம்மது(ஸல்) வின் தோழர்கள் அதற்கு மாறாக செயல்பட்டனர். ஆகவே இது முற்றிலும் பொய்யான குற்றச்சாட்டுகளாகும். சோதனையின் நேரங்களில் கூட எந்தவிதமான எதிர்தாக்குதலுக்கும் அவர்கள் முற்படவில்லை. களங்கமற்ற நம்பிக்கையாளர்களாக அவர்கள் செயல்பட்டனர். நம்பிக்கையின் விஷயத்தில் எவ்விதமான கட்டாயத்தையும் அவர்கள் ஒருபோதும் செலுத்தவில்லை. இந்த உண்மையை உறுதிப்படுத்துவதற்கு இதைவிட மேலான சான்றுகளின் அவசியமில்லை. பொறுமை மூலமாகவே அவர்கள் தங்களின் நம்பிக்கையை நிலைநாட்டிக் கொண்டது. மற்றெந்த மக்களும் இத்தகையில் பொறுமையை கையாண்டதாக காணயியலாது. இது ஒரு வரலாற்று உண்மையாகும். வாளின் முன் பொறுமையை கையாளுவதற்கான விடாமுயற்ச்சியும் மனோபலமும் அவர்களுக்கு இருந்தது. நம்பிக்கையின் ஒளியைப் பொழியும் மக்களுக்கு மட்டுமே இத்தகையில் பொறுமையை கையாளுவதற்கு முடிவது.

இஸ்லாமை வாளால் பரப்பப்பட வேண்டும் என்று ஒரு உண்மையான முஸ்லீமும் ஒருபோதும் நம்பிக்கொள்ளவில்லை. இஸ்லாம் பரவியது அதன் உள்ளார்ந்த சிறப்பு தன்மை மூலமாகும். இஸ்லாமை பரப்ப வேண்டியது வாளால் என நம்பிக் கொள்பவர் இஸ்லாமின் உள்ளார்ந்த நற்குணங்களைக் குறித்து உணராதவர்களாவார்கள். அவர்களின் அணுகுமுறை காட்டுமிருகங்களுக்கு சமமாகயிருக்கின்றது. அண்ணல் நபிகள் நாயகம்(ஸல்)

அவர்கள் வாள் எடுத்தது, இஸ்லாமின்பால் மக்களை மாற்றிக் கொள்வதற்கு என கூறுகின்றோர்கள் அறியாமையின் வட்டாரத்தில் வாழ்கின்றோர்களாவார்கள். சில கிறிஸ்தவ மிஷனரிகளும் இவ்வாறே எண்ணுகின்றன. **அடிப்படையற்ற இத்தகைய குற்றங்களை ஒரு உண்மையான அமைப்பின் மீது சாட்டுவதை விட பெரிய அநீதியும் பொய்யும் வேறு எதுவும் இருக்க முடியாது. அதன் தெளிவான கட்டளையாவது "மார்க்கத்தில் எவ்வித கட்டாயமுமில்லை" என்றாகும்.**

அண்ணல் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களும் அன்னாரின் தோழர்களும் செய்த போர்கள், தங்களின் எதிராளிகளின் தாக்குதலுக்கு எதிராக தங்களை சுயம் பாதுகாப்பதற்காக நடத்தப்பட்டவையாகும். அமைதியை நிலைநாட்டிக் கொள்வதற்கும்! வாளுமாக வருகின்றோர்களை விரட்டியடிப்பதற்கும்! அதாவது நம்பிக்கை கொண்ட மக்களை பாதுகாத்துக் கொள்வதற்காக ஒரு தற்காப்பு நடவடிக்கையாகவேயிருந்தது அப்போர்கள்.

**"மார்க்கத்தில் எவ்வித கட்டாயமுமில்லை"** என திருமறை மிக உறுதியாக மேலும் மேலும் கூறுகின்றது. இஸ்லாமை ஏற்றுக்கொள்வதற்காக நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ஒருபோதும் போர் செய்ததில்லை. அன்னார் போர் செய்தது, ஏராளமாக முஸ்லீம்கள் கொலை செய்யப்பட்ட வேளைகளிலோ அல்லது தங்களின் மனைகளிலிருந்து நியாயமற்ற முறையில் அவர்களை வெளியேற்றிக் கொண்ட வேளைகளிலே ஆகும். புனித குர்-ஆன் அதற்குரிய அனுமதியளித்தப்பின் மட்டும்!. **"எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ அவர்களுக்கு (போரிட) அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில் அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கின்றது. மேலும் நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான்"** (22:40) அதாவது நேரடியான ஆக்கிரமிப்புக்கு எதிராக சுயம் பாதுகாப்பதற்கும்! மனசாட்சியின் சுதந்திரத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கும்! நம்பிக்கை கொள்ளுவதற்கான சுதந்திரத்தை தக்க வைத்துக் கொள்ளுவதற்குமான தற்காப்பு போராட்டம்.

ஆனால் இன்றைய "முல்லாக்கள் திருக்குர்ஆனிலிருந்து இந்த வசனத்தை படித்துக் கொள்கின்றனர். பின்னர் அவர்கள் உறுதியுடன் கூறுகின்றனர் **"மார்க்கத்தில் எவ்வித கட்டாயமுமில்லை".** ஆனால் துரதிர்ஷ்டம் என கூறலாம் அவர்கள் அதற்கு மாறாக செயல்படுகின்றனர். அதாவது "மஹ்தி வாளுமாக வருவார்" என கூறுகின்றனர். அம்முஸ்லீம்கள் இஸ்லாமை பற்றிக் கூறுவது போன்றுஇ அவர்கள் பயங்கரவாதிகளாகவே செயல்பட்டுக் கொள்கின்றனர்.

**"மார்க்கத்தில் எவ்வித கட்டாயமுமில்லை."** உண்மையும் பொய்மையும் வேறுபடுத்தப்பட்டுள்ளது. ஆகவே கட்டாயப்படுத்தல் என்பதற்கு இங்கு எந்த இடமுமில்லை. மிக வருத்தத்திற்குரிய காரியம் என கூறலாம் **"மார்க்கத்தில் எவ்வித கட்டாயமுமில்லை"** என திருக்குர்-ஆன் உறுதியாக கூறியிருந்தும்

பகைமையால் அய்யமற்ற இதயங்கள் இறைவார்த்தையை தவறாக விளக்கி கட்டாயம் செலுத்திக் கொள்வதற்கு அனுமதியளித்திருக்கின்றனர்.

மதசுதந்திரம் என்பது அவசியமானதாகும். எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகின்றான். "மார்க்கத்தில் எவ்வித கட்டாயமுமில்லை" பைபிளில் இத்தகைய கட்டளைகள் எதுவுமில்லை. பின்னர் எதற்கு போருக்கான வழிவகுத்தது?. போர் என்பது இஸ்லாமின் அடிப்படையான வழிமுறையாகயிருந்திருந்தால் மக்காவில் 13 வருடக்கால இறைத்தூதரின் ஆட்சி கட்டம் வீணாகிப் போனது என கூற வேண்டும். ஏனெனில் இந்த காலஅளவில் ஒரு சூழ்நிலையிலும் அன்னார் வாள் பயன்படுத்தவில்லை. உண்மை இதுவாகும், தவறுகள் மற்றும் ஒடுக்குமுறை காரணமாக போருக்கு அனுமதியளிக்கப்பட்டது. "நீங்கள் தவறு செய்துவிட்டீர்கள் வாளின் நேரம் வந்தடைந்துவிட்டது. வாளை பயன்படுத்தி மக்களை இஸ்லாமின் பால் கொண்டு வாருங்கள்" என்பதல்ல அதற்குரிய கட்டளை. மாறாக உண்மையின் அதற்குரிய உத்தரவு இவ்வாறாகும். உங்களிடம் செய்த தவறுகளை நீங்கள் பொறுமையுடன் எதிர்கொண்டீர்கள். இப்போது அவர்கள் வாள் எடுத்திருகின்றனர். ஆகவே நீங்களும் வாளால் அவர்களை எதிர் கொள்ளுங்கள். உங்களை தாக்கும் பொழுது தற்காப்புக்காக போராடுங்கள் என்பது எல்லா சட்டத்திலும் அனுமதிக்கப்பட்டுள்ள காரியமாகும்.

2018-ல் மிக முக்கியமான இந்த வெள்ளிக்கிழமைப் பேருரையை நன்கு புரிந்துக் கொள்வதற்கு அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக! **ஜமாஅத்து அஹ்மதியாவில் இருந்து நீக்கப்பட்டு 17 வருடம் பின்னடைகின்றது. 2001 ஜனுவரி 5-ம் தேதி மௌரிஷியஸ் தீவுக்கு சுற்றும் நடைபெற்ற அஹ்மதியா குத்து.ஃபாவில் அஹ்மதிய முஸ்லீம் அமைப்பு மகிழ்ச்சியுடன் சுவையாக எங்களின் மாமிசத்தை புசித்தனர். இஸ்லாமின் மிக சிறந்த போதனையை அவர்கள் நிராகரித்துக் கொண்டனர். நாங்கள் என்ன செய்தோம்? இஸ்லாமின் உண்மையான போதனைகளை நாங்கள் பிரச்சாரம் செய்தோம். உண்மையான இஸ்லாமைப் பற்றி சிந்திப்பதற்கும் சுயம் சீர்திருத்திக் கொள்வதற்கும் அவர்களை அழைத்தோம். இப்போது 17 வருடம் பின் செல்கின்றது. அவர்கள் திரும்ப வரவில்லை.**

**அல்லாஹ்வின் அருளால் இந்த எளிய அடியானும் அல்லாஹ்வின் கலீ.ஃபாவுமாகிய என்னிடம் அல்லாஹ் வாக்குறுதியளித்ததுப் போன்று ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் உலகெங்கும் பரவிக் கொண்டிருக்கின்றது. அல்லாஹ்வின் ஒளியை அணைக்க திட்டங்கள் தீட்டியவர்கள் சுயம் அழிந்துக் கொள்வார்கள். பாவமன்னிப்பை கோருபோர்களையும் சுயம் சீர்திருத்துக் கொள்போர்களையும் தவிர!** உலகெங்குமுள்ள என் நேர்மையான சீடர்கள் மீது அல்லாஹ் அருள் பொழிவானாக! சிறியதும் பெரியதுமான உதவிகரங்கள் மூலம் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் உதவிபுரிகின்றோர்கள், அல்லாஹ்வின்

திருப்திக்காக அவனது வழியில் அர்ப்பிக்கின்ற எல்லா தியாகங்களையும் அல்லாஹ் ஏற்றுக் கொள்வானாக! ஆமீன். இம்மையிலும் மறுமையிலும் அல்லாஹ் முற்றிலும் சிறந்த நற்பலனை வழங்கட்டும். வெற்றியிலிருந்து வெற்றியின்பால் முன் செல்வதற்கு எளிமையுடனும் நேர்மையுடனும் உண்மையுடனும் நமக்கு முடிந்து விடட்டும். இத்தகைய நம்பிக்கைக்கு மலைகளைக் கூட நகர்த்த முடியும். நமது மிகப்பெரிய பொக்கிஷத்தை கைப்பற்ற முடியட்டும். அல்லாஹ்வும் அவனது மாபெரும் அன்பும் (நம் அனைவர்கள் மீது இருக்கின்றது). இன்ஷா அல்லாஹ். ஆமீன்.


**Translated by:**

*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com


**Issued by:**




**R. Jamaluddin Raother**
**Amir - Kerala South Zone, India**
**Jamaat Ul Sahih Al Islam**
**Email:** jamal.raother@gmail.com
**Phone:** 9447001832, 04752252663